**கட்புல அரங்கேற்ற பல்கலைக்கழகம் - 2022**

**-------------------------------------------------------------------**

## 1. நிதிக் கூற்றுகள்

### 1.1 அபிப்பிராயம்

கட்புல அரங்கேற்ற பல்கலைக்கழகத்தின் 2022 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றுகை கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2022 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் 1978 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தில் 107 (5) உபபிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரை மற்றும் 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் 12 ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென்று நான் கருதுகின்ற எனது கருத்துகள் மற்றும் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தின் நிதிக் கூற்றுகளின் ஊடாக 2022 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு பல்கலைக்கழகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்-கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பல்கலைக்கழகத்தின் ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன.

எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பானவிடத்து பல்கலைக்கழகத்தின் கடமைகள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உட்படும் வகையில் அதன் ஒழுங்கமைதல், முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் முறையாகவும் போதுமான அளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும், குறித்த முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,
- ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி நிறுவனம் செயற்பட்டுள்ளது எனவும்.
- தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்பட்டுள்ளது எனவும்,
- வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 கிடைக்கப் பெற வேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

### 1.5.1 கிடைக்கப்பெற வேண்டிய தொகை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உடன்படிக்கை மற்றும் முறிகள் மீறிய இரண்டு அலுவலர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மொத்தம் ரூபா.3,225,207 ஐ மீளாய்விற்கான ஆண்டிலும் அறிவிடப்படவில்லை. | ஒரு அலுவலரிடமிருந்து அறிவிடப்பட வேண்டிய தொகை UPF நிதியத்திடமிருந்து அறிவிடப்பட்டுள்ளதுடன், எஞ்சிய தொகை மாதாந்தம் அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மற்றைய அலுவலர் மற்றும் அவரது பிணையாளருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டு நடைமுறைப்படுதல் | துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| | பல்கலைக்கழகத்திடம் கிடைக்கப்பெற வேண்டிய மீதிகளில் உள்ளடக்கப்-பட்டுள்ள ரூபா.16,692,072 ஆன மாணவர் உதவி தொகையின் மீதி பல ஆண்டுகளாக சீராக்கபடாதிருத்தல். | மிக நீண்ட காலமாக காணப்படும் இந்த மீதிகளை பூரண ஆய்விற்கு உட்படுத்தி பொருத்தமான நடவடிக்கை 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்வதற்கு ஆலோசனை வழங்குதல். | துரிதமாக சீராக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும |

### 1.5.2 செலுத்தப்பட வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்பு- | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| 2 ஆண்டுகள் மற்றும் 11 ஆண்டுகள் ஆகிய காலப்பகுதி தொடக்கம் காணப்படும் மொத்தம் ரூபா.61,598,913 ஆன வைப்புகள் மற்றும் பிடிபணம் என்பவற்றின் மீதி 2 ஆண்டுகளையும் பார்க்க பழமையான மீதியின் மொத்தம் ரூபா. 43,472,497 ஐ செலுத்தப்பட வேண்டுமென்பதுடன், மீதி மீளாய்விற்கான ஆண்டில் சீராக்கப்படவில்லை. | இந்த கணக்குகளை ஆய்வு செய்து பழைய மீதிகளை அடையாளம் காணப்பட்டு உரிய நடவடிக்கைகளை 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளுதல். | உரிய மீதிகளை சீராக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும |

### 1.6 சட்டங்கள், விதிகள் ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கு ஒழுங்கமையாமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றின் தொடர். | இணங்காமை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக் கோவையில் XX ஆவது அத்தியாயத்தின் 3.1 பிரிவு | கற்கை பதவியணியின் வருகை மற்றும் வெளியேறல் உறுதிப்படுத்திக் கொள்ளாது மீளாய்விற்கான ஆண்டில் சம்பளம் மற்றும் கொடுப்பனவாக ரூபா.670,389,801 ஐ செலுத்தப்பட்டிருந்தது. | சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை செலுத்தும் போது உரிய சேவை பெற்றுக்கொண்டதாக கிளை தலைவரின் சான்றிதழ் பெற்றுக்கொண்டதன் பின்னர் கொடுப்பனவு மேற்கொள்ளுதல். | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) | தேசிய நூலக மற்றும் ஆவணவாக்கல் சேவை சபையின் 2016 திசெம்பர் 22 ஆம் திகதிய 2004/நூஆ/1(2016 -திருத்தம்) ஆம் இலக்க சுற்றறிக்கை | பல்கலைக்கழகத்தில் 2022.12.31 ஆம் திகதியில் ரூபா.3,573,329 ஆன நூலக பொருட்கள் தொடர்பில் 2019 ஆம் ஆண்டின் பின்னர் வருடாந்த ஆய்வு நடாத்தப்படவில்லை. | நூலக இருப்புகளின் கணக்கெடுப்பை பராமரிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவின் தலைவரால் கணக்கெடுப்பு நடாத்துவதற்கு தற்போது திட்டமிடல். | சுற்றுநிருபம் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைபயன்

மீளாய்விற்கான ஆண்டில் தொழில்பாட்டு விளைபயன் ரூபா.85,552,337 ஆன பற்றாக்குறை காணப்பட்டதுடன், அதற்கு நேரெதிராக கடந்த ஆண்டின் மிகை ரூபா.257,427,107 ஆகும். அதன்படி நிதிசார் விளைபயன் ரூபா.342,979,444 ஆன வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இதன் வீழ்ச்சிக்கு அரசாங்கத்தின் மூலதன அளிப்புகள் மற்றும் ஏனைய மூலதன அளிப்புகளின் குறைவடைதலும், உடன்படிக்கை மேற்கொண்ட சேவைகளின் செலவினம் மற்றும் மூலதன சொத்துக்களின் மேம்படுத்தல் செலவினம் அதிகரித்தலும், பிரதான காரணங்களாகின.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களில் செல்நெறி பகுப்பாய்வு

மீளாய்விற்கான ஆண்டில் நிறுவனத்தின் ஒட்டு மொத்த வருமானத்தில் 96% அரசாங்கத்தின் அளிப்புகளை கொண்டிருந்ததுடன், கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் அரசாங்கத்தின் அளிப்புகள் 6% இல் குறைவடைந்திருந்தது. மேலும் வேறு மூலதன அளிப்புகள் 100% ஆல் குறைவடைந்திருந்தது. அதேபோன்று கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்விற்கான ஆண்டில் முதலீடுகளின் மீது வட்டி வருமானம் 73% ம், உடன்படிக்கை சேவை செலவினம் 77% ம் மூலதன சொத்துக்களை மேம்படுத்தும் செலவினம் 596% ம் அதிகரித்திருந்தது.

### 2.3 விகிதாசார பகுப்பாய்வு

#### (அ) நடமாடும் விகிதாசாரம்

நடைமுறை விகிதாசாரம் ஆகக் குறைந்தது 2:1 ஆக காணப்படினும், மீளாய்விற்கான ஆண்டில் அது 0.72:1 காணப்பட்டமையால் செயற்பாட்டு மூலதனம் வினைத்திறனுடன் வழிநடாத்தும் தேவைப்பாடு அவதானிக்கப்பட்டது.

#### (ஆ) உடனடி விகிதாசாரம்

கடந்த ஆண்டில் உடனடி விகிதாசாரம் 1.9:1 காணப்பட்டதுடன், மீளாய்விறாகன ஆண்டில் குறித்த விகிதாசாரம் 0.7:1 வகையில் காணப்பட்டது.

#### (இ) மாணவர் ஒருவருக்கான செலவினம்

கடந்த ஆண்டில் ரூபா. 355,629 ஆன ஒரு மாணவருக்கான செலவினம் நடப்பாண்டில் ரூபா.434,072 வரை அதாவது, 22% ஆல் அதிகரித்திருந்தது.

**3. தொழில்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| 2010 ஆம் ஆண்டு தொடக்கம் நிதிக் கூற்றுகளில் உள்ளட-க்கப்பட்டிருந்த பெறுமதி ரூபா.1,022,650,000 ஆன 03 காணி துண்டுகள் பல்கலைக்கழ-கத்திடம் சட்ட ரீதியாக கையேற்பதை மீளாய்விற்கான ஆண்டிலும் தவறவிடப்பட்டி-ருந்தது. | ஒரு காணியில் அளிப்பு பத்திரம் சனாதிபதியின் ஒப்பம் பொருட்டும், மற்றைய காணியின் அளிப்பு பத்திரம் பதிவு நடவடிக்கைகளுக்காக காணி பதிவாளர் திணைக்களத்திடமும் அனுப்பி வைத்தல். ஒரு காணியை கையேற்பதற்கு தேவையான பரிந்துரைகளை பெற்றுக்கொண்டு தற்போது சுற்றுலா மற்றும் காணி அமைச்சு எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல். | கையேற்கும் நடவடிக்கை களை துரிதமாக முடிவுறுத்தல். |

**3.2 பெறுகை முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| சிற்றுண்டிச்சாலை உபகரணங்களை கொள்வனவு செய்யும் பெறுகை நடவடிக்கையின் போது, பெறுகை வழிகாட்டல் கோவையின் 7.8.7 பந்தி பிரகாரம், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவால் விவரக் குறிப்புகளை விபரமாக மதிப்பீடு செய்யாமை காரணமாக விவரக் குறிப்புகளுக்கு இணங்காத ரூபா .1,018,500 பெறுமதியான 03 உபகரணங்களை கொள்வனவு செய்திருத்தல். | சிறிய அகற்றல் வேலைகளில் விடய வெல்லைக்கு, தரத்திற்கோ செயலாற்றுகை-க்கோ போதியளவு தாக்கத்தை ஏற்படுத்தாத காரணத்தால், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகளை பெற்றுக்கொள்ளுதல். | அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4. கணக்கீட்டு நெறிமுறை மற்றும் நல்லாட்சி**

**4.1 வருடாந்த செயற்றிட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்விற்கான ஆண்டுக்கு ஏற்புடையதாக செயற்றிட்டத்தில் அடையாளம் காணப்பட்ட 300 செயற்பாடுகளில், நோக்கங்-களை அடைந்துக்கொள்கின்ற செயற்பாடுகள் 106 ம், செயற்-படாத 108 செயற்பாடுகளும் ம், காணப்பட்டன. நோக்கங்களை அடைந்துக்கொள்வதற்கான செயற்பாடுகள் 86 மட்டும் காணப்பட்டன. | அவதானிப்புகளுடன் இணங்குகின்றேன். | செயற்பாட்டு திட்டத்தில் நோக்கங்களை அடைந்துக்கொள் ளுதலை காலோசிதமாகவும் வினைத்திறனாகவும் நிறைவேற்றிக்கொள் ளுதல் வேண்டும். |